**சார்பு நீதிமன்றம், மேலூர்**

நாள் *:27.08.2024*

வா.சா.*1* – ஜெயலட்சுமி, த/பெ.வெங்கடாசலபதி

*O.S No. : 250/2022*

*(*சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.*)*

**பிரவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** *:*

நான் தற்போது *05.02.2009* ம் தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் ஒளி நகல் ஆவணம் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.*1* ஆக குறியீடு செய்யப்படுகிறது. *20.05.2015* தேதியிட்ட முத்துபாண்டி என்பவருக்கு *1*ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.*2, 20.05.2015* அன்று ராமசாமி என்பவருக்கு *1*ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.*3, 20.05.2015* தேதியிட்ட சுப்புலட்சுமி என்பவருக்கு *1*ம் பிரதிவாதி அவரது குமாரர் *2* ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.*4, 12.08.2015* தேதியிட்ட சுவாமிநாதன் என்பவருக்கு *1, 2* பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.*5,12.08.2015* தேதியிட்ட லட்சுமி என்பவருக்கு *1,2* பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.*6, 20.12.2021* அன்று வெள்ளை கருப்பன் என்பவருக்கு சுவாமிநாதன் எழுதி கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.*7,* பட்டா வா.சா.ஆ *8,* வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.*9,* அஞ்சல் இரசீதுகள் வா.சா.ஆ.*10,* அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ *11,* அறிவிப்பு இராமசாமி சார்வு செய்யப்படாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சல் மேலுறை வா.சா.ஆ *12,* வில்லங்க சான்றிதழ் நகல் வா.சா.ஆ.*13.*

**குறுக்கு விசாரணை:**

வழக்கு சொத்து *1*ம் பிரதிவாதி சுந்தரத்திற்கு பூர்வீக பாத்தியப்பட்ட செரத்து என்றால் சரிதான். சுந்தரம் வரதராஜு நாயுடுவின் மகன் என்றால் சரிதான். வரதராஜு நாயுடுவின் மூலமாகதான் *1*ம் பிரதிவாதி சுந்தரத்திற்கு வழக்கு சொத்து பாத்தியம் என்றால் சரிதான். சுந்தரத்தின் ஒரே மகன் *2*ம் பிரதிவாதியான சென்றாயப் பெருமாள் என்றால் சரிதான். சுந்தரத்தினுடைய இரண்டு மகள்கள் தான் இந்த வழக்கின் *3*ம் பிரதிவாதியான கலைச்செல்வி மற்றும் என்னுடைய தாயார் பாலா நாகம்மாள் என்றால் சரிதான். பாலா நாகம்மாளுக்கு நானும் *4*ம் பிரதிவாதி ராஜியும் என்றால் சரிதான். வேறு யாரும் உடன்பிறந்த சகோதரர்கள் இல்லை. தற்போது வரை நானும் *4*ம் பிரதிவாதி ராஜியும் வழக்கு சொத்தை பொறுத்தவரை பாகம் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து *2*ம் இனம் என் தந்தை வெங்கடாசலபதியனுடைய சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். *2*ம் இனச் சொத்தை பொறுத்து இன்னும் நாங்கள் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை. வழக்கு *2*ம் இனச் சொத்தை பொறுத்து *3*ம் பிரதிவாதி கலைச்செல்வி தான் சொத்து சுவாதீனத்தில் உள்ளார் என்றும் நானோ என் தங்கை ராஜியோ சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். எனக்கு பூர்வீக சொத்தில் எப்படி உரிமை உள்ளதோ அதேபோல என் தங்கை ராஜிக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான்.

*Sd/- xxxxxx*
*Sub Judge,*
*Melur.*